[1980 பிப்ரவரி 4

மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன் : ஒவ்வொரு மாவட்டத் தலைநகர்கள் அல்லது முக்கியமான நகரங்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. கட்டுகின்ற முடிவு எடுக்கிறபோது பொது மக்களுக்கும் மாவட்டத்திற்கும் பயன்படும் வகையில் எங்கே அமைத்தால் பொருத்தமாக இருக்குமோ அங்கே அமைக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தமிழ்நாட்டில் இப்படி திரையரங்குகளை நடத்துவதால் அரசுக்கு ஒன்றும் வருமானம் கிட்டப் போவதில்லை. ஆகவே, பத்திரிகை நிருபர்களுக்கும் எம்.எல். ஏக்களுக்கும் ஓசியில் படம் பார்க்க அரசு அனுமதிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பத்திரிகை நிருபர்களுக்காக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்கிற அந்த ஜாடையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இலவசமாக அனுமதிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். எந்தக் காட்சிகளை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவசமாகக் காட்ட வேண்டுமென்று அரசு விரும்புகிறதோ அதற்கு எப்போதும் அரசு ஏற்பாடு செய்து கொண்டுதான் இருக்கிறது. அதற்காகக் கவலைப்படத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண். 28.......

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே நான் பதிலளித்த கேள்வியில் மாண்புமிகு அரங்கநாதன் அவர்கள் கேட்ட துணைக் கேள்வியை நீக்கியதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்குப் பிறகு ஒரு விவாதமே நடைபெற்று அவர் பலவிதமான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். அவை குறிப்பேட்டில் இருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அரங்கநாதன் பேசிய அனைத்தையும் நீக்கும்படி உத்தரவிட்டேன்.

சித்தேரி உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்.

*வினா எண். 28—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தாலுக்கா சித்தேரி கிராமத்தில் அரசு உயர்நிலைப்பள்ளி கட்டப்படுவதற்கு காண்டிராக்ட் விடப்பட்டு மேற்கூரை பிரிக்கப்பட்ட நிலையிலேயே இருப்பதை இந்த அரசு அறியுமா ?

(ஆ) இதை முடிக்கும் திட்டம் ஏதாவது இந்த அரசிடம் உண்டா ?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) மற்றும் (ஆ) : ரூ. 38,525 மதிப்பீட்டில் இப்பள்ளிக்கு மராமத்து பணிகள் மேற்கொள்ள ஒப்புதலளிக்கப்பட்டு பணி துவங்கப்பட்டு மேற்கூரை பிரிக்கப்பட்டது. இதற்கிடையில் 1977-ம் ஆண்டு புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பள்ளிகளின் வெள்ள நிவாரண கட்டிட பணிகளுக்காக இதற்கென ஒதுக்கப்பட்ட தொகை மாற்றப்பட்டு விட்டதால் இப்பள்ளியின் மராமத்து பணி தடைப்பட்டது. இப்பொழுது இப்பணி மீண்டும் துவங்கப்பட்டு வேலையும் முடிவடைந்து 1979, அக்டோபர், 26-ம் நாள் அன்று கட்டிடம் கல்வித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திண்டிவனத்தில் தொழிற்பயிற்சி நிலையம்.

*வினா எண். 29— திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புதியதாக திண்டிவனத்தில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் செயல்படும் ?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 9–30]

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, அதுபோன்று திண்டிவனத்தில் இல்லை என்று அமைச்சர் செயலர் அவர்கள் சொன்னார்கள். தென் ஆற்காடு மாவட்டத்திலே வேறு எங்காவது இந்தத் திட்டம் இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.